பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

13 07 2026 6 45

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான இஸ்ரோ, ககன்யான் விண்கலம் தொடர்பாக மூன்று முக்கிய சோதனைகளை வெற்றிகரமாக நடத்தியுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

2. நாடு முழுவதும் மரம் நடுவதை ஒரு மாபெரும் இயக்கமாக மாற்ற வேண்டும் என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவ்ராஜ் சிங் சௌஹான் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. மக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய டாஸ்மாக் கடைகள் மூடப்படும் என்று மாநில மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. விக்னேஷ் கூறியுள்ளார்.

4. வியட்நாம் படகு விபத்தில் உயிரிழந்த தமிழகத்தை சேர்ந்தவர்கள் உட்பட 15 இந்தியர்களின் உடல்கள் விரைவில் அனுப்பி வைக்கப்படும் என்று அந்நாட்டு அரசு கூறியுள்ளது.

5. இந்தியாவுக்கு எதிரான மகளிர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து வெற்றிபெற 457 ரன் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான இஸ்ரோ, ககன்யான் விண்கலம் தொடர்பாக மூன்று முக்கிய சோதனைகளை வெற்றிகரமாக நடத்தியுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

வீண்வெளி வீரர்களை சுமந்து செல்லும் ககன்யான் விண்கலம் கடலில் வந்து இறங்கிய பிறகு, அது நேராக மேல்நோக்கிய நிலையில் இருப்பதை உறுதி செய்வதே முதல் சோதனையாகும்.

விண்வெளி வீரர்களின் பாதுகாப்பிற்கு இது மிக முக்கியமான தேவைகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

இரண்டாவது சோதனை விண்கலத்திற்கு தேவையான உந்துசக்தியை வழங்கும் முக்கிய பகுதியும், மற்றொரு பகுதியும் பூமிக்குள் நுழைவதற்கு சற்று முன்பு துண்டிக்கப்பட்டு தனித்தனியாக பிரிவதை உறுதி செய்யும் சோதனையும் நடத்தப்பட்டது.

இந்த சோதனையும் துல்லியமாக நடைபெற்றதாக இஸ்ரோ கூறியுள்ளது.

மூன்றாவது சோதனை, விண்கலத்தின் உச்சிப் பகுதியில் பாராசூட்டுகள் உள்ள பகுதியின் கட்டமைப்புத் திறனை உறுதி செய்வதற்காக நடத்தப்பட்டது.

<<<<>>>>

நாடு முழுவதும் மரம் நடுவதை ஒரு மாபெரும் இயக்கமாக மாற்ற வேண்டும் என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவ்ராஜ் சிங் சௌஹான் கேட்டுக்கொண்டுள்ளார்.

புதுதில்லியில் மத்திய வேளாண் அமைச்சகம் நேற்று ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சி ஒன்றில், மரக்கன்று நடும் ஆர்வலர்களிடையே அவர் உரையாற்றினார்.

ஒவ்வொரு குடும்பத்திலும் பிறந்தநாள், திருமண நாள், குழந்தை பிறப்பு மற்றும் பெற்றோரின் நினைவு நாட்களில் ஒரு மரக்கன்று நட்டு அவற்றை பராமரிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இதன் மூலம் மரக்கன்று நடும் வழக்கம் மெல்ல மெல்ல ஒரு மாபெரும் இயக்கமாக மாறும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஊராட்சிகள், நகர்ப்புற உள்ளாட்சிகளில் மரம் நடுவதற்கான நிலையான இடங்களை அடையாளம் காணுமாறும் அவர் அழைப்பு விடுத்தார்.

அதிகரித்து வரும் வெப்பத்தை சமாளிக்கவும், சுற்றுச்சூழலை தொடர்ந்து பராமரிக்கவும் பசுமையான சூழல் அவசியம் என்றும் திரு. சிவ சிவ்ராஜ் சிங் கூறியுள்ளார்.

<<<<>>>>

மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சகம், 'மேரா யுவ பாரத்' வலைதளம் மூலம் 'வளர்ச்சியடைந்த இந்தியாவுக்காக போதைப்பொருள் இல்லாத இளைஞர்கள்' என்ற பிரச்சாரத்தின் அடுத்த கட்டத்தைத் தொடங்கியுள்ளது.

நடனம், இசை, ரீல், குறும்படம், தெருக்கூத்து மற்றும் கவிதை வாசிப்பு ஆகிய ஐந்து ஆக்கப்பூர்வமான பிரிவுகளில் மூன்று நிலைகளில் போட்டிகள் நடைபெறவுள்ளன.

மாவட்ட, மாநில அளவில் நடந்து, இறுதியில் தேசிய அளவில் முடிவடையும் வகையில் இப்போட்டிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

இதற்கான பதிவுகள் MY Bharat இணையதளத்தில் இன்று முதல் தொடங்குகின்றன.

மாவட்ட அளவிலான போட்டிகள் வரும் 24-ஆம் தேதி முதல் 27ம் தேதி வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி நாட்டு மக்களிடையே வானொலியில் மனம் திறந்து பேசும் மன் கி பாத் நிகழ்ச்சி இம்மாதம் 26ஆம் தேதி ஒலிப்பரப்பாக உள்ளது.

இந்த நிகழ்ச்சிக்கான கருத்துகளையும், ஆலோசனைகளையும் பொதுமக்கள் 1 8 0 0 - 1 1 - 7 8 0 0 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணில் தெரிவிக்கலாம் அல்லது Namo செயலி அல்லது MyGov இணையதளம் மூலமாகவும் கருத்துகளை இம்மாதம் 24ஆம் தேதி வரை பதிவிடலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

மக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய டாஸ்மாக் கடைகள் மூடப்படும் என்று மாநில மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. விக்னேஷ் கூறியுள்ளார்.

பழனியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், முதற்கட்டமாக பள்ளிகள் மற்றும் வழிபாட்டுத் தலங்கள் அருகே இருந்த

717 டாஸ்மாக் கடைகள் மூடப்பட்டதாக கூறினார்.

கடைகள் மூடப்படுவதால் அரசுக்கு ஏற்படும் நிதி இழப்பை ஈடுகட்ட மாற்று வழிகளை அரசு ஆராய்ந்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

திண்டுக்கல் மாவட்டத்தில் கோவில் நிலங்கள் தனியாருக்கு தரப்படவில்லை என்றும், காலம்காலமாக அந்த இடத்தில் வசிப்பவர்களுக்குத்தான் அரசு வழங்க உள்ளதாகவும் அவர் கூறினார்.

<<<<>>>>

தமிழகத்தில் கொலை, கொள்ளை, போதைப்பொருட்கள் நடமாட்டம் அதிகரித்துள்ளதாக அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

சேலத்தில் நேற்று நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், தவெக அரசு திமுக கூட்டணிக் கட்சிகளின் உதவியுடன் ஆட்சி நடத்தி வருவதாக கூறினார்.

நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளை தேர்தல் அறிக்கையில் தெரிவித்துவிட்டு அதை எப்படி செயல்படுத்துவதென்று தெரியாமல் அரசு தடுமாறுவதாகவும் திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

வியட்நாம் படகு விபத்தில் உயிரிழந்த தமிழகத்தை சேர்ந்தவர்கள் உட்பட 15 இந்தியர்களின் உடல்கள் விரைவில் அனுப்பி வைக்கப்படும் என்று அந்நாட்டு அரசு கூறியுள்ளது.

வியட்நாமின் பு குவோக் தீவு அருகே சுற்றுலாப் படகு விபத்துக்குள்ளானதில் உயிரிழந்த தமிழத்தை சேர்ந்த 10 பேர் உள்பட 15 இந்தியர்களின் உடல்கள் ஹோ சி மின் நகருக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

சட்டப்பூர்வ நடைமுறைகளை முடித்த பிறகு, அந்த உடல்கள் விரைவில் இந்தியாவுக்குக் அனுப்பிவைக்கப்படும் என்று வியட்நாமில் உள்ள இந்தியத் தூதரகம் தனது சமூக வலைதளத்தில் தெரிவித்துள்ளது.

இதற்கான பணியில் தூதரக அதிகாரிகளும் வியட்நாமிய அதிகாரிகளும் இணைந்து செயல்பட்டு வருகின்றனர்.

மீட்கப்பட்ட 17 இந்திய சுற்றுலாப் பயணிகளில் 16 பேர் தாயகம் திரும்பிக்கொண்டிருப்பதாகவும், ஒருவர் மட்டும் கவலைக்கிடமான நிலையில் பு குவோக் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் தூதரகம் கூறியுள்ளது.

*நான்கு பணியாளர்கள் உட்பட 36 பேருடன் சென்ற அந்த அதிவேகப் படகு, Rut Ngoai தீவு அருகே திடீரென எழுந்த அலையில் சிக்கி கவிழ்ந்ததில் இந்தத் துயரச் சம்பவம் நிகழ்ந்தது.*

*இதில் 21 பேர் உயிர் பிழைத்த நிலையில், இரண்டு பெண்கள் உட்பட 15 இந்திய சுற்றுலாப் பயணிகள் உயிரிழந்தனர்.*

*இதற்கிடையில், இந்த விபத்து குறித்து விசாரணை நடத்த வியட்நாம் பிரதமர் திரு. லே மின் ஹங் உத்தரவிட்டுள்ளார்.*

*விபத்திற்குக் காரணமானவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கவும் அவர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.*

*<<<<>>>>*

*தமிழகத்தில் மேற்குத்தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இன்று லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.*

*மாநிலத்தின் பிற பகுதிகள், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் பொதுவாக வறண்ட வானிலை நிலவக்கூடும் என்றும், அவ்வப்போது ஓரிது இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*<<<<>>>>*

*<u>இருவரிச் செய்திகள்</u>*

*ஈரான் அணுசக்தி விவகாரத்தில் தூதரக ரீதியிலான சாத்தியக்கூறுகளை முழுமையாக பயன்படுத்த அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் விரும்புவதாக இஸ்ரேல் அதிபர் திரு. பெஞ்சமின் நெதன்யாகு கூறியுள்ளார்.*

*<<<<>>>>*

*தாய்லாந்து தலைநகர் பாங்காக்கில் கேளிக்கை விடுதி ஒன்றில் நள்ளிரவு ஏற்பட்ட தீ விபத்தில் 27 பேர் உயிரிழந்தனர்.*

*<<<<>>>>*

*ஒரே நாளில் 3 லட்சத்து 61 மரக்கன்றுகளை நட்டு அகமதாபாத் நகராட்சி கின்னஸ் சாதனை படைத்துள்ளது.*

*<<<<>>>>*

*சத்தீஸ்கட் மாநிலம் தண்டேவாடா மாவட்டத்தில் நக்சல் தடுப்பு நடவடிக்கையின்போது பாதுகாப்புப் படையினர் 5 துப்பாக்கிகளையும், 18 லட்சம் ரூபாய் மதிப்புள்ள தங்கத்தையும் பறிமுதல் செய்தனர்.*

*<<<<>>>>*

*கோவை ஆவாரம்பாளையத்தில் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தை ஆக்கிரமித்து கட்டப்பட்டிருந்த கட்டிடங்கள் நேற்று இடித்து அகற்றப்பட்டன.*

*<<<<>>>>*

*தவிர்க்க இயலாத காரணத்தால் அரக்கோணம் - சேலம், சேலம் - அரக்கோணம் இடையே இயக்கப்படும் ரயில் சேவை இன்று முதல் மறு உத்தரவு வரும் வரை ரத்து செய்யப்படுவதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.*

<<<<>>>>

வேலூர் கிரீன் சர்க்கிள் பகுதியில் சுரங்கப் பாதை பணிகள் நடைபெற உள்ளதை முன்னிட்டு போக்குவரத்தில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

<<<<>>>>

வால்பாறை மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் பலாப்பழ சீசன் தொடங்கியுள்ளதையடுத்து, யானைகள் நடமாட்டம் அதிகரித்துள்ளதால், தேயிலைத் தோட்டங்களுக்குச் செல்லும் தொழிலாளர்கள் கவனமாக இருக்க வனத்துறை அறிவுறுத்தியுள்ளது.

<<<<>>>>

பராமரிப்பு பணி காரணமாக தாம்பரத்தில் இருந்து இன்று காலை விழுப்புரத்திற்கு இயக்கப்படும் 12 பெட்டிகள் கொண்ட பயணிகள் ரயில் இன்று 8 பெட்டிகளுடன் இயக்கப்படும் என்று தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

<<<<>>>>

காஞ்சிபுரம் அருள்மிகு ஏகாம்பரநாதர் கோவிலில் புதிய தங்கத் தேரோட்டத்தை இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. ரமேஷ் நேற்று தொடங்கி வைத்தார்.

<<<<>>>>

சென்னை கிண்டி பகுதியில் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்களை வைத்திருந்ததாக 2 பேர் கைது செய்யப்பட்டு அவர்களிடமிருந்து 144 கிலோ போதைப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

<<<<>>>>

சென்னை வியாசர்பாடி சர்மா நகரில் உள்ள உடற்பயிற்சிக் கூடத்தை மாநகராட்சி ஆணையர் திரு. சமீரன் நேற்று நேரில் ஆய்வு செய்தார்.

<<<<>>>>

சென்னை மாநகராட்சியின் சார்பில் கடற்கரையில் நேற்று மாநிலத்தின் பாரம்பரியத்தை பறைசாற்றும் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

<<<<>>>>

## விளையாட்டுச் செய்திகள்

இந்தியாவுக்கு எதிரான மகளிர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து வெற்றிபெற 457 ரன் என்ற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

Lords-ல் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மூன்றாம் நாளான நேற்று இந்தியா இரண்டாவது இன்னிங்சில் 7 விக்கெட் இழப்புக்கு 341 ரன் எடுத்து டிக்ளேர் செய்தது.

<<<<The End>>>>